சுருக்கம்

வேளாண்மை – "உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் திட்டத்தினை 2016–2017ஆம் ஆண்டிற்கு 1.4.2016 முதல் 31.3.2017 வரை செயற்படுத்த தொடர் நீட்டிப்பு ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வேஉ 3) துறை

அரசாணை(2டி)எண். 234 நாள்: 18.07.2016.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண்.72, வேளாண்மை(வேஉ 3)த்துறை, நாள் 12.6.2015.
2. வேளாண்மை ஆணையர் கடித எண்.ஆகூபி1/17207/2016, நாள் 23.5.2016.

*******

ஆணை:–

தமிழகத்தில் திருச்சி, கோவில்பட்டி, காஞ்சிபுரம், பரமக்குடி, உதகமண்டலம், கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில், தர்மபுரி, சேலம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய 14 இடங்களில் செயல்பட்டு வரும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்த 1.4.2014 முதல் 31.3.2015 வரை தொடர் நீட்டிப்பு ஆணை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வேளாண்மை ஆணையர், மேற்படி திட்டம் மேலும் ஓராண்டு காலத்திற்கு, அதாவது 1.4.2016 முதல் 31.3.2017 வரை நீட்டிப்பதற்கு உரிய கருத்துருவினை, அதன் இன்றியமையாத அவசியத்தை வலியுத்தியும், இதற்கான காரணக்கூறுகளையும் அனுப்பி உரிய ஆணையினை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்குறித்த வேளாண்மை ஆணையர் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்து, அக்கருத்துருவினை ஏற்று, "உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் திட்டத்தினை 2016–2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக, மேற்படி திட்டத்தை 1.4.2016 முதல் 31.3.2017 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள திட்டம் குறித்த செலவுகள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | |
|---|---|
| "2435 – ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் –01– விற்பனை தரக் கட்டுப்பாடு – 101 – விற்பனை வசதிகள் – I திட்டத்தில் சாராதது – AA உரக்கட்டுப்பாட்டு ஆணையை செயற்படுத்துதல்.<br>(த.தொ.கு. 2435–01–101– AA-0006)" | ரூ. 813.17 இலட்சம் |

| | |
|---|---|
| "2435 – ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 – விற்பனை தரக் கட்டுப்பாடு – 102 – தரம் பிரித்தல், தரக்கட்டுப்பாட்டு வசதிகள் – I திட்டத்தில் சேராதது – AO உரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடத்தை நிறுவுதல். (து.தொ.கு. 2435–01–102– AO -0006)" | ரூ. 65.52 இலட்சம் |
| "2401 – 00 – பயிர் வளர்ப்பு – 105 எருக்களும் இரசாயன உரங்களும் I – திட்டத்தில் சேராதது – AA உள்ளூர் ஆதாரங்கள் உட்பட கலப்பு உர மேம்பாடு வேளாண்மை இயக்குநர் பொறுப்பிலுள்ளவை. (து.தொ.கு. 2401–00–105– AA -0009)" | ரூ. 67.91 இலட்சம் |

5. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.எண். 33653/வேளாண்மைத்துறை/2016, நாள் 08.07.2016–இன் படி ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்,
மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காயர்(A&E/G&SSA/E&RSA/C&RA/AAD),சென்னை 18.(பெயரில்)

<u>நகல்:–</u>
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை–9.
நிதித் (வேளாண்மை) துறை, சென்னை–9.
வேளாண்மை (ஆநு3)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

18.7.2016
பிரிவு அலுவலர்